**செய்தி வெளியீடு எண்: 074** **நாள் : 12 .02 .2015**

**<u>செய்தி வெளியீடு</u>**

புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை மேம்படுத்துவதில் தமிழ்நாடு அரசின் சீரிய வழிகாட்டுதலின் படி தமிழ் நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தியில் தமிழ்நாட்டின் பங்கு நாட்டின் மொத்த நிறுவுதிறனில் 32 சதவீதமும் நாட்டின் காற்று சக்தி நிறுவு திறனில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாகவும் உள்ளது.

தமிழ்நாட்டினை சூரிய சக்தியில் முதன்மை மாநிலமாக மாற்றும் உயரிய நோக்கத்தோடும், சூரிய சக்தியை மக்கள் இயக்கமாக மாற்றும் நோக்கோடும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தமிழ்நாடு சூரிய சக்தி கொள்கை 2012 ஐ தொடங்கி வைத்துள்ளார்கள். மேலும், இந்த நோக்கத்தை விரிவு படுத்தும் வகையில். தமிழ் நாடு அரசின் விஷன் 2023 ல் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியில் 15000 MW குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இக்குறியீட்டினை விரைவில் அடையும் விதமாக தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை பல்வேறு திட்டங்களான முதலமைச்சரின் சூரிய மேற்கூரைத் திட்டம் முதலமைச்சரின் சூரிய ஒளியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டம், தெரு விளக்குகளை சூரிய சக்தி மூலம் மின்னூட்டுதல் போன்ற திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது.

தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையும், கோயம்புத்தூர் மாவட்ட சிறு தொழில்கள் சங்கம் இணைந்து ரெனர்ஜி 2015 மற்றும் எலெக்ட்ரோடெக் 2015 (RENERGY 2015 – ELEKTROTEC 2015) தொழில் நுட்ப கருத்தரங்கினை நடத்துகிறது. இக்கருத்தரங்கு கோயம்புத்தூர் கொடிசியா வளாகத்தில் பிப்ரவரி 13.02.2015 அன்று காலை 10 மணிக்கு தொடங்கி வைக்கப்படுகிறது.

தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையின் சார்பில் அமைக்கப்படும் கண்காட்சி 12,500 சதுர அடி பரப்பளவில் அமைகிறது. இக்கண்காட்சியில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை மக்கள் அறிந்து கொள்ளும் வகையிலும் விழிப்புணர்வு பெறும் வகையிலும் தனியார் முன்னணி நிறுவனங்களான சன் எடிசன் எனர்ஜி இந்தியா, ஸ்வலெக்ட் எனர்ஜி சிஸ்டம்ஸ், போகோஸ் இந்தியா, ஸ்ரீநந்திஸ், சுகம் பவர் சிஸ்டம்ஸ் போன்ற நிறுவனங்கள் கண்காட்சியில் பங்கேற்கின்றன.

இக்கண்காட்சி கோயம்புத்தூர் கொடிசியா வளாகத்தில் 13.02.2015 முதல் 16.02.2015 வரை நடைபெறுகிறது. பொது மக்கள் பெருவாரியாக கலந்து கொண்டு பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**